1996 ஆகஸ்ட் 6]

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டது போல அவருடைய தொகுதியில் தொழிலாளர் நலத் துறை நிலம் பட்டா செய்து கொடுத்தால் அந்தப் பகுதியில் அதற்கான கடனுதவி தந்து வீடுகளைக் கட்டித் தரும் பணிகளைத் துவக்க அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 101, திரு. டி. இராஜேந்தர், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

101--

கம்பிவட தொலைக்காட்சி இயக்கும் தொழில்

1367--*திரு. டி. இராஜேந்தர் :**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கம்பிவட தொலைக்காட்சி இயக்குபவர்களுக்கான (Cable T.V. Operators) தொழிலை சிறுதொழில் சட்டத்தின்கீழ் கொண்டு வர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், சிறு தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் சலுகைகளை அவர்களுக்கும் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) டெவலப்மெண்ட் கமிஷனர் (சிறுதொழில்கள்), புதுடெல்லி வழங்கியுள்ள மத்திய அரசு பின்பற்ற வேண்டிய கொள்கை வழிமுறைகளின்படி கம்பிவட தொலைக்காட்சி நிறுவுதல் மற்றும் இயக்குபவர்கள் சிறுதொழில் சேவை மற்றும் வர்த்தக நிறுவனங்களாக (SSSBE) பதிவு செய்யப்படுகின்றன.

(ஆ) அதனால் சிறுதொழில் நிறுவனங்களுக்கு வழங்கும் சலுகைகளை இவர்களுக்கும் வழங்க இயலாது.

திரு. டி. இராஜேந்தர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியில் கேபிள் டி.வி. ஆப்பரேட்டர்களுக்கு உரிமம் வழங்க, கட்டாயப்படுத்தி, லஞ்சம் வசூலிக்கப்பட்டதாகக்

கூறப்படுகிறது. அப்படி வசூலித்த தொகையினை அவர்களுக்குத் திருப்பி அளிக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிற மூலக் கேள்விக்கும், இந்தக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. இருந்தாலும், இந்த எஸ். எஸ்.எஸ்.பி.ஈ. என்பது சிறு தொழில் சேவை மற்றும் வர்த்தக நிறுவனங்களாகப் பதிவு செய்யப்படுவது, சிறுதொழில் சட்டத்தின் கீழ் அவசியம் பதிவு செய்யப்படவேண்டிய கட்டாயம் இல்லை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் இது சம்பந்தமாக வசூல் செய்யப்பட்டதாகச் சொல்லுவது குறித்து, தனிக் கேள்வியாகக் கேட்டால் அது எந்தத் துறை சம்பந்தப்பட்டது என்பதை அறிந்து விளக்கம் அளிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 102, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. துரை சந்திரசேகரன் மற்றும் திரு. பே.வே. ஸ்ரீ. வெங்கடேசன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

102--

பத்திரிகை விளம்பரத்துக்கான செலவு

251--திரு. துரை சந்திரசேகரன், திரு பே. வே. ஸ்ரீ.* **வெங்கடேசன் :

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

1989-90, 1990-91, 1991-92, 1992-93, 1993-94, 1994-95, 1995-96 நிதியாண்டுகளில் செய்தி விளம்பரத்துறை மூலம் பத்திரிகைகளில் விளம்பரத்துக்கு அரசு கொடுத்த தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1989-90 முதல் 1995-96 வரையிலான நிதியாண்டுகளில் செய்தித்துறையின் மூலம் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட விளம்பரங்களுக்கு அரசு செலவிட்ட தொகை விவரம் பின்வருமாறு :